சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை

முன்னிலை: திருமதி. வி.பி.சுகந்தி, எம்.எல்.,
சார்பு நீதிபதி, ஊத்தங்கரை

2018-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்: 196/2017**

ஜி.சரஸ்வதி .. வாதி

/எதிராக/

1.டி.கோவிந்தன்
2.ஜி.ரமேஷ்
3.ஜி.ஜானகி
4.ஆர்.விமலா
5.கே.மாயக்கண்ணன்
6.வெங்கடாசலம் .. பிரதிவாதிகள்

WEB COPY

இவ்வழக்கானது 26.03.2018-ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.தேவேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 பிரதிவாதிகளுக்காக முறைப்படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, 5,6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.கே.முருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், 5,6 பிரதிவாதிகள் தரப்பில் போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமலும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், வாதி தரப்பு கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்:

# தீர்ப்புரை

இவ்வழக்கானது தாவா சொத்துக்களை நலம்தீது கருதி 5 சம பாகமாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தினை வழக்கின் வாதிக்கு பாகம் பிரித்து அதன் தனி சுவாதீனம் ஒப்படைக்கும்படி பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து வழக்குச் சொத்தில் வாதிக்குரிய ஒரு பங்கினை வாதிக்கு கிடைக்கும்படிக்கு உத்தரவிடக் கோரியும், தாவா சொத்து பொறுத்து 1-வது பிரதிவாதி, 5,6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014-ஆம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திர ஆவண எண்:1231/2014 என பதிவு செய்துக் கொடுத்துள்ளது செல்லாது என்று விளம்புகை செய்யக் கோரியம், இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு வாதிக்குரிய 1/4 பங்குரிமை தனி சுவாதீனம் கிடைக்கும் வரையில் பிரதிவாதிகள் வழக்குச் சொத்தினை யாதொரு வில்லங்கப் பாராதீனமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரியும், இவ்வழக்கு செலவுக்காகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

## 2. தாவா பிராதின் சுருக்கம்:

வாதி மற்றும் 2,3,4 பிரதிவாதிகள், 1-வது பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுள். 5,6 பிரதிவாதிகள் வழக்கிற்கு மூன்றாம் தரப்பினர்கள். தாவா சொத்தானது வாதிக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட பிதுரார்ஜித சொத்தாகும். தாவா சொத்துக்களுக்கு கூட்டுக்குடும்ப கர்த்தா என்ற முறையில் 1-வது பிரதிவாதியின் பெயரில் வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், "அ" பதிவேடு, கந்தாய தீர்வை பராமரிக்கப்பட்டு வருகிறது. தாவா சொத்துக்களும் இன்னும் சில சொத்துக்களும இன்றளவும் பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப பிதுரார்ஜித சொத்துக்களாகும். வாதிக்குத் திருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தாலும், 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் தாவா சொத்தில், வாதியம் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து காலப்பயிர்கள் செய்து அறுவடை முடிந்த பின்பு அவருக்குரிய பங்கினை இன்றளவும் பெற்று வருகிறார். வாதியும்,

3,4 பிரதிவாதிகளும், 1,2 பிரதிவாதிகளிடம் தங்களுக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டதற்கு 1,2 பிரதிவாதிகள் பிரித்துக் கொடுக்க மறுத்து விட்டார்கள். வாதியும், 3,4 பிரதிவாதிகளும் அவர்களது கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் குறித்து ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச் சான்றிதழ் பெற்று பார்த்தபோது, அதில் 1-வது பிரதிவாதி, 5,6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014-ஆம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஒன்று வாதிக்குத் தெரியாமல் மோசடியாக எழுதி அதனை ஊத்தங்கரை சார்பதிவாளர் ஆவண எண் 1231/2014 என பதிவு செய்துக் கொடுத்த விவரம் மனுதாரருக்குத் தெரிய வந்ததாகவும், அந்த ஆவணத்தில் 2-வது பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்திருப்பதாக தெரிய வந்தது. அதனால் வாதி, கடந்த 29.06.2017-ஆம் தேதி ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார். அதனை 5,6 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு 08.07.2017-ஆம் பொய்யான பதில் சட்டஅறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். அதன் பின்னிட்டு தாவா சொத்தை பிரித்துக் கொடுக்கக் கேட்டதற்கு பிரதிவாதிகள் மறுத்துவிட்டதோடு தாவா சொத்து குறித்து 05.04.2014-ஆம் தேதி ஒரு ஆவணம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் தாவா சொத்து குறித்து வில்லங்கப் பாராதீனம் ஏற்படுத்தவும் முயற்சித்து வருவதால வாதி இந்த தாவாவைத் தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலைய ஏற்பட்டதாகவும், எனவே தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

WEB COPY

3. இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு முறைப்படி அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, 5,6 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆஜரானார்கள். 1 முதல் 4 பரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டார்கள். மேலும் 5,6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டார்கள்.

4. வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5. வாதி தன்னுடைய சத்திய நிரூபணப் பிரமாணப் பத்திரத்தில் தாவாவில் கூறியுள்ள சங்கதிகளையே தெரிவித்துள்ளார். தாவா சொத்துக்கு 1-வது பிரதிவாதி பெயரில் உள்ள கணிணி சிட்டா உண்மை நகலை வா.சா.ஆ.1-ஆகவும், 1-வது பிரதிவாதி தாவா சொத்து குறித்து 5,6 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக் கொடுத்துள்ள வண்டி வழி கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.2-ஆகவும், வாதி மற்றும் 3,4 பிரதிவாதிகள் சேர்ந்து 1,2,5,6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகலை வா.சா.ஆ.3-ஆகவும், அதனை 5,6 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகளை வா.சா.ஆ.4-ஆகவும், 5,6 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு சார்வு நகலை வா.சா.அ.5-ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

6. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைத் தீர பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1-லிருந்து தாவா சொத்து குறித்து 1-வது பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. தாவா சொத்து பிதுரார்ஜித சொத்து என்று வாதியால் சொலலப்பட்டுள்ள நிலையில், அது பிதுரார்ஜித சொத்து இல்லை என்றும், 1-வது பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதையும் நிரூபிக்க வேண்டிய கடமை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உள்ளது. ஆனால் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அவ்வாறு நிரூபிக்கப்படவில்லை. மேலும் 1-வது பிரதிவாதிக்கு தாவா சொத்து எந்த வகையில் பிதுரார்ஜிதமாகப் பாத்தியப்பட்டது என்பதை 5,6 பிரதிவாதிகள் தரப்பில் யாரிடம் விசாரித்துத் தெரிந்துக் கொண்டு அவர்கள் பெயரில் கிரையம் செய்துக்கொண்டுள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் 5,6 பிரதிவாதிகளும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பினைத் தெரிவிக்கவில்லை.

7. எனவே வாதி தாவாவில் கோரியுள்ளவாறு, தாவா சொத்துக்கள் 1-வது பிரதிவாதிக்கு பிதுரார்ஜிதமாகப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றே இந்நீதிமன்றம் கருத வேண்டியுள்ளது. 1-வது பிரதிவாதிக்கு பிதுரார்ஜிதமாகப் பாத்தியப்பட்ட சொத்தாக தாவா சொத்துக்கள் உள்ள நிலையில், அது குறித்து 1-வது பிரதிவாதிக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் ஆவணம் எழுதி வைக்க உரிமை இல்லை. எனவே தாவா சொத்துக்கள் பாகம்பிரிக்கப்படாத கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அந்த வகையில் வாதிக்கும் தாவா சொத்தில் ஒரு பங்கு உரிமையுள்ளது என்பதால், வாதி தாவா சொத்து குறித்து கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமும் இதர பரிகாரங்களும் வாதிக்குக் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. (1). **முடிவாக, தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/5 பங்கு கிடைக்கத்தக்து என்று செலவுத் தொகையுடன் முதல்நிலைத் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.**

WEB COPY

**(2). தாவா சொத்துக்களில் முறையான பாகம் ஏற்பட்டு, வாதிக்குரிய தனி சுவாதீனம் ஒப்படைக்கும்வரை பிரதிவாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து யாதொரு வில்லங்கப் பாராதீனமும் ஏற்படுத்தக்கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படுகிறது.**

**(3). தாவா சொத்து பொறுத்து 1-வது பிரதிவாதி, 5,6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014-ஆம் தேதி ஏற்படுத்திக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் செல்லாது எனறு விளம்புகை செய்யப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 27.03.2018-ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 .. ஜி.சரஸ்வதி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:**

வா.சா.ஆ.1 .. 15.11.2017/தாவா சொத்துக்கு 1-வது பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ள கணிணி பட்டா உண்மை நகல்

வா.சா.ஆ.2 .. 07.04.2014/தாவா சொத்தை 1-வது பிரதிவாதி, 5,6 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக் கொடுத்துள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 .. 29.06.2017/வாதி மற்றும் 3,4 பிரதிவாதிகள் சேர்ந்து 1,2,5,6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.4 .. 5,6 பிரதிவாதிகள் வா.சா.ஆ.3-ஐ பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் -2

வா.சா.ஆ.5 .. 08.07.2017/வாதி வழக்கறிஞருக்கு 5,6 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு சார்வு நகல்

WEB COPY

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

WEB COPY

**அசல் வழக்கு எண் 196/2017**
**நாள்: 27.03.2018**
**தீர்ப்புரை பகரப்பட்டது.**

(1). முடிவாக, தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/5 பங்கு கிடைக்கத்தக்து என்று செலவுத் தொகையுடன் முதல்நிலைத் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.

(2). தாவா சொத்துக்களில் முறையான பாகம் ஏற்பட்டு, வாதிக்குரிய தனி சுவாதீனம் ஒப்படைக்கும்வரை பிரதிவாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து யாதொரு வில்லங்கப் பாராதீனமும் ஏற்படுத்தக்கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படுகிறது.

(3). தாவா சொத்து பொறுத்து 1-வது பிரதிவாதி, 5,6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014-ஆம் தேதி ஏற்படுத்திக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் செல்லாது எனறு விளம்புகை செய்யப்படுகிறது.

**சார்பு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

WEB COPY